CC 330/2019

26.04.2024

அ.சா.1,

பெயர்: கண்ணன்

த/பெ. சோமசுந்தரம்

அ.சா.1 கு.ப.ம.எண். 1512/2022-ன் கீழ் மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை மேற்கொள்ளப்படுகிறது. சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் கூறுவதாவது

Accused Present.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

எனக்கு இயக்குநர் அலுவலகத்தில் இருந்து ஆய்வு செய்வதற்கு ஒப்புதல் கடிதம் வந்ததா என்றால் சரிதான், மேற்படி கடிதத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் என்னிடம் கேட்கவில்லை , அதனால் நான் தரவில்லை. இணை இயக்குநர் அலுவலகம் கோவையில் உள்ளது என்றால் சரிதான். எனக்கு அலைபேசி மூலம் தகவல் கிடைத்தது என்றால் சரிதான். மேற்படி விபரத்தை நான் போலிசார் விசாரணையில் கூறியுள்ளேன் என்றால் சரிதான்.

இணை இயக்குநர் அலுவலகத்தில் ஏதாவது தகவல் கிடைத்தால் எங்கள் அலுவலகத்தில் உள்ள பதிவேட்டில் குறிப்பிடவேண்டும் என்றால் சரியல்ல, surprise visit சென்றால் குறிப்பிடத் தேவையில்லை. அரசு அலுவலகத்தில் எந்தத் தகவல் வந்தாலும் முறைப்படி குறிப்பேட்டில் குறித்து வைத்துக்கொள்ளவேண்டும் என்றால் சரிதான். திடீர் விசாரணைக்குச் செல்லும்போது எங்கள் இணை இயக்குநர் அலுவலகத்திற்கு தகவல் தெரிவிக்கவேண்டும் என்றால் சரிதான், ஆனால் மேற்படி தகவலை உடனுக்குடன் தெரிவிக்க வேண்டி ய அவசியமில்லை, மாத இறுதியில் தெரிவித்தால் போதும்.

நான் திடீர் விசாரணைக்குச் செல்லும்போது மாத இறுதியில் எனது இயக்குநர் அலுவலகத்திற்கு முழுத் தகவலைத் தெரிவிக்கவேண்டும் என்றால் சரிதான். மேற்படி அறிக்கையை 3 நகல்கள் தயாரித்து ஒன்றை இயக்குநர் அலுவலகத்திற்கும் ஒரு நகலை Indian Medical Board க்கும், மற்றொரு நகலை எங்கள் அலுவலகத்திலும் வைக்கவேண்டும் என்றால் சரியல்ல, இயக்குநர் அலுவலகத்திற்கு தகவல் தெரிவித்தால் போதும். என்னுடைய அலுவலகத்தில் அதன் நகலை வைக்கவேண்டும்.

போலிசார் விசாரணையில் இயக்குநர் அலுவலகத்திற்கு தெரிவித்த தகவலை ஒப்படைத்தீர்களா என்றால் ஒப்படைக்கவில்லை. எதிரியின் வளாகத்திற்கு ஆய்வு செய்த இடமானது வடசித்தூரில் உள்ளது. வடசித்தூரில் எத்தனை மருத்துவர்கள் உள்ளார்கள் என்றால் அது குறித்த விபரம் எனக்குத் தெரியாது. போலிசார் விசாரணையில் எந்த எண்ணில் இருந்து தகவல் வந்தது என்ற விபரத்தை தெரிவித்தேனா என்றால் இல்லை.

நான் ஆய்வு செய்த எதிரியின் இடத்திற்கு பக்கத்தில் நிறைய வீடுகள், கடைகள் உள்ளதா என்றால் தற்சமயம் எனக்கு ஞாபகம் இல்லை.

வடசித்துாரில் எத்தனை மருந்தகம் உள்ளது என்றால் அதனை நான் கவனிக்கவில்லை. நான் சம்பவ இடம் செல்லும்போது அங்குள்ள ஏதாவது மருந்துக் கடைகளிலோ அல்லது மருத்துவர்களிடமோ விசாரணை செய்தேனா என்றால் இல்லை, எனக்கு பொது மக்களிடம் இருந்து தகவல் வந்தது, நான் பொது மக்களை விசாரித்துவிட்டு எதிரியின் இடத்திற்குச் சென்றேன். மேற்படி விபரத்தை நான் போலிசார் விசாரணையில் கூறவில்லை. பொதுமக்களில் நான் விசாரித்த நபரின் பெயர் தற்போது எனக்கு ஞாபகம் இல்லை.

ஒரு வளாகத்திற்குள் சட்டப்படி ஆய்வு செய்ய நான் அனுமதி பெறவில்லை என்றால் சரியல்ல. அனுமதி பெறாத காரணத்தால்தான் அது குறித்த ஆவணத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் ஆய்வு செய்யச் சென்ற எதிரியின் வளாகத்தின் முகவரி தெரியுமா என்றால் எனக்குச் செல்வதற்கு முன்பு தெரியாது, நான் சம்பவ இடத்திற்குச் சென்று விசாரித்துச் சென்றேன். போலிசார் விசாரணையில் நான் ஆய்வு செய்த முகவரியைக் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல.

எங்களுக்கு தகவல் கிடைத்தவுடன் மதியம் சுமார் 2, 2.30 மணியளவில் கோவையில் இருந்து நான் மற்றும் எனது ஓட்டுநரும் சம்பவ இடத்திற்குச் சென்றோம். போலிசார் விசாரணையில் நான் சென்ற காரின் பதிவு எண்ணைச் சொன்னோ என்றால் தற்போது ஞாபகம் இல்லை, அது அரசு வாகனம் ஆகும். நான் சம்பவ இடத்திற்குச் செல்லும்போது, squard எதையும் பார்ம் பண்ணி செல்லவில்லை. சம்பவ இடத்தில் பதாகை வைக்கப்பட்டிருந்ததுஅதில் என்ன எழுதியிருந்தது என்று 7 வருடங்களுக்கு மேல் ஆனதால் ஞாபகம் இல்லை. மேற்படி விபரத்தை போலிசார் விசாரணையில் நான் கூறியுள்ளேன்.

பொதுமக்கள் யாரிடமும் எதிரியிடம் இருந்து அலோபதி மருந்துகளைப் பெற்றதற்கான ஆவணங்களை நான் கைப்பற்றவில்லை, ஏனென்றால் எதிரியே ஒப்புக்கொண்டார். பொது மக்களை நான் விசாரணை செய்தேன், 7 வருடங்களுக்கு மேல் ஆனதால் ஞாபகம் இல்லை. போலிசார் விசாரணையில் நான் மேற்படி விபரத்தைக் கூறவில்லை. சுமார் மாலை 04.30 மணியளவில் சம்பவ இடத்தை ஆய்வு செய்தேன். நான் சென்றபோது சம்பவ இடத்தில் எதிரி மட்டுந்தான் இருந்தார்.

சம்பவஇடத்தில் இருந்து லெட்டர் பேடு, மருத்துவச் சீட்டு ஆகியவற்றை கைப்பற்றி போலிசாரிடம் நான் கொடுத்தேனா என்றால் இல்லை. சம்பவ இடத்திற்குச் சென்றபோது அடிப்படையான மருத்துவ உபகரணங்கள் எதையும் நான் கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல, நான் கைப்பற்றினேன். போலிசார் விசாரணையில் மேற்படி விபரத்தைப் பற்றி

கூறவும் இல்லை, மேற்படி பொருட்களை நான் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. சம்பவ இடத்தில் சுமார் 45 நிமிடம் ஆய்வு செய்தேன். வடசித்தூர் - நெகமம் 4,5 கி.மீ இருக்கும் என்றால் 7 வருடங்களுக்கு மேல் ஆனதால் ஞாபகம் இல்லை.

நான் சோதனை செய்துவிட்டு பொள்ளாச்சியில் உள்ள எனது வீட்டிற்கு சென்றுவிட்டேன். சம்பவ இடத்தில் கைப்பற்றிய மருந்துகளை நான் சீல் வைத்தேனா என்றால் இல்லை. வடசித்தூரில் உள்ள கிராம நிர்வாக அலுவலகரைக் கூப்பிட்டு அவர் முன்பு பொருட்களை கைப்பற்றி சீல் வைத்தேனா என்றால் இல்லை. நான் கைப்பற்றிய பொருட்கள் குறித்து இயக்குநர் அலுவலகத்திற்கு அறிக்கை சமர்ப்பிக்கவில்லை என்றால் சரியல்ல.

இந்த வழக்கில் என்னை காவல் ஆய்வாளர் விசாரித்தாரா என்றால் 7 வருடங்களுக்கு மேல் ஆனதால் ஞாபகம் இல்லை. போலிசார் என்னை அலுவலகத்தில் வைத்து விசாரித்தார்களா என்றால் இல்லை , நான் காவல்நிலையம் சென்றேன், அங்கு வைத்துதான் விசாரித்தார்கள். 21.07.2017 ம் தேதியன்று என்னை காவல்நிலையத்தில் வைத்து விசாரித்தார்களா என்றால் சரிதான்.

மதியம் உணவு இடைவேளை ஆனதால் குறுக்குவிசாரணை தற்காலிகமாக ஒத்திவைத்து உணவு இடைவேளைக்குப் பின்பு தொடரும்.

**உணவு இடைவேளைக்குப் பிறகு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

டாக்டர் சஹாப்தீன் என்பவர் கிணத்துக்கடவு மற்றும் வடசித்தூரிலும் ஜே. எம். என்ற பெயரில மெடிக்கல் செண்டர் வைத்துள்ளார் என்றால் சரிதான், ஆய்வுக்கு செல்வதற்கு முன்பு ஜே.எம் மெடிக்கல்செண்டருக்கு நான் சென்றேன் என்றால் சரியல்ல. அசா ஆ 1 புகாரை நான் எழுதவில்லை என்றால் சரிதான்.

மேற்படி புகார் நான் சொன்னவாறு கொடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல.புகாரில் என்ன எழுதப்பட்டு இருந்தது என எனக்கு முழுமையாக தெரியாது என்றால் நான் புகாரைப் பார்த்துவிட்டு தான்கையொப்பம் இட்டேன். டாக்டர் சஹாப்தீன் என்பவரின் தூண்டுதலின் பெயரில் எதிரியின் மீது பொய்யாக வழக்கு புனையப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரி மருத்துவமனை நடத்தவில்லை என்றால் சரியல்ல,

எதிரியின் வளாகத்தில் இருந்து எந்த வித பொருள்களையும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல. எதிரி மருத்துவமனை நடத்துவதாக ஒப்புக்கொண்டார் என பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரியை நான் பார்க்கவில்லை என்றால் சரியல்ல. காவல் நிலையத்தில் நான் பொய்யாக புகார் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரி ஆயுர்வேதத்தில் டிப்ளமோ படித்துவிட்டு கடை நடத்திவந்தார் என்றாலும் சகாப்தீன் கூறியதின் அடிப்படையில் பொய்யான புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

**நீதிமன்ற கேள்வி**

புகாரை நான் படித்துப்பார்த்துதான் கையொப்பம் இட்டேன்.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(S/d. Tr.E.Pragasam.,B .A.,,B.L.,)
Judicial Magistrate No. II,
Pollachi.